**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.156/2024**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலுச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : மாரியப்பகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : வலையபட்டி | வயது | : சுமார் 63 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 13.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணை**

சொத்துக்கள் சம்மந்தமாக கடந்த 06.09.1968 தேதியிட்ட பஞ்சாயத்து முச்சலிக்காவை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் பழனிச்சாமிகவுண்டர் அசல் பஞ்சாயத்து முச்சலிக்காவை வாங்கினார். அதற்கு பிறகு அவர் தர மறுத்துவிட்டார். அதனால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் கடந்த 1968 தேதியிட்ட பஞ்சாயத்து முச்சலிக்கா பற்றி எந்தவித சங்கதிகளும் வழக்குரை சங்கதிகளில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? சரிதான். பஞ்சாயத்து முச்சலிக்கா தன்மை படி ஒவ்வொரு நபருக்கும் தாவா சொத்துக்கள் தனித்தனியாக பிரித்து நான்குமால் கண்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். கடந்த 22.12.2000 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் படி நானும், எனது சித்தப்பா குப்பணகவுண்டர் மற்றும் அவரது தகப்பனார் பழனிச்சாமிகவுண்டர் ஆகியோர்கள் சேர்ந்து வழக்கு சொத்துக்களில் எங்களுக்குரிய பாகத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் ? வாய்மொழியாக பிரித்து கொண்டோம். ஒட்டன்சத்திரத்தில் உள்ள நிலத்தை

எனக்கு ஒதுக்கிவிட்டார்கள். அரவக்குறிச்சி நிலத்தை குப்பணகவுண்டருக்கும், பழனிச்சாமிக்கும் ஒதுக்கிவிட்டோம். தற்போது சொன்ன விபரங்களை நான் வழக்குரை சங்கதிகளில் சொல்லவில்லை என்றால் ? ஆவணங்கள் வழியாக பிரித்து கொண்டதாக சொல்லியுள்ளேன். 1968ம் ஆண்டு பிரிக்கப்பட்ட பாகப்பிரிவினையின் படி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் ? இல்லை. நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் தவறுதலாக குறிப்பிட்டுள்ளார்கள். பழனிச்சாமி மனைவி ராமாயம்மாள் பெயரில் ஒட்டன்சத்திரம் சொத்திற்கும், ராமசாமி மற்றும் ஆறுமுகம் பெயரில் பட்டா ஏற்பட்டுவிட்டதால் சொத்தினை நான் அனுபவிக்க இயலவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் ? இல்லை. ஏன் குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதற்கு காரணம் எதுவும் இல்லை என்றால் ? சரியல்ல. காரணம் உள்ளது. குறிப்பிட்டு என்ன காரணம் உள்ளது என்றால் ? நிலத்திற்கு நிலம் மாற்றிக் கொள்ளலாம், பரிவர்த்தனை செய்யலாம் என்று சொன்னார்கள். வழக்கு சொத்துக்களில் 1வது அயிட்டமாக குறிப்பிட்டுள்ள சொத்துக்களில் தனித்தனியாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் ? தனித்தனியாக பட்டா உள்ளது. நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் தவறுதலாக குறிப்பிட்டுள்ளார்கள். தாவா 2இலக்க சொத்தான சர்வே எண்.2052 என்ற புலமானது பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். 2 ஏக்கர் 6 செண்ட் நிலமானது எந்த உட்பிரிவில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ? குறிப்பிட்டு சொல்லவில்லை. உட்பிரிவு எண்ணை குறிப்பிடவில்லை. ஆனால் சர்வே எண்ணை குறிப்பிட்டுள்ளேன். அதற்கான நான்குமால் விபரத்தையும் குறிப்பிடவில்லை என்றால் ? சொல்லவில்லை. 3வது அயிட்டமாக குறிப்பிட்டுள்ள சர்வே எண்.2052ல் உட்பிரிவு எண்கள் குறிப்பிட்டு 3 ஏக்கர் 17 செண்ட் நிலம் காட்டப்பட்டுள்ளது என்றால் ? உட்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.2052ல் எனது சித்தப்பாவிற்கு தனியாக பாகம்

ஒதுக்கப்பட்டு அவரது பெயரில் பட்டா ஏற்பட்டு அவர் தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் ? சரிதான். 1–ம் பிரதிவாதி பொன்னுச்சாமிக்கு பஞ்சாயத்தால் பிரித்து விடப்பட்ட சொத்தினை தவிர அதிகப்படியான சொத்துக்களை 1–ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். மற்ற பிரதிவாதிகள் அவரவர்கள் பாகத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் ? 2ம் பிரதிவாதி சற்று அதிகப்படியான நிலத்தை அனுபவித்து வருகிறார். சர்வே எண்.2052 என்ற புலத்தில் 3, 4 பிரதிவாதிகளுக்கு நிலமே இல்லை. 5, 6 பிரதிவாதிகள் சர்வே எண்.2052 என்ற புலத்தில் பாகம் ஒதுக்கப்பட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்களா என்றால் ? ஆமாம். அனுபவித்து வருகிறார்கள். பிரதிவாதிகள் சொத்துக்களை அதிகமாக அனுபவித்து வருவதால் நான் சொத்துக்கள் வேண்டும் என்று கேட்கிறேனா என்றால் ? ஆமாம். 1ம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை போர்வெல் போட்டு, தென்னை மரம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் ? போர்வெல் ஏற்கனவே போட்டுவிட்டார். வழக்கு தாக்கல் செய்த பிறகு தென்னை மரம் வைத்து அனுபவித்து வருகிறார். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள கிஸ்தி ரசீதுகள் தாவா 1வது அயிட்ட சொத்தை தவிர வேறு சொத்துக்களுக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். எனது பிராதில் பிரதிவாதிகள் சொத்துக்களை அதிகமாக அனுபவித்து கொண்டு சொத்துக்களை கொடுக்க மறுக்கிறார்கள் என்று நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், சொத்துக்களை பிரதிவாதிகள் அதிகமாக அனுபவித்து வருவதால் சுவாதீனம் கோரியும் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். அவ்வாறு பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எத்தனை ஆண்டு காலமாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் ? 2, 3 ஆண்டுகாலம் பேச்சுவார்த்தை இல்லை. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இருக்ககூடிய பகைமையின் காரணமாகவும், முன்விரோதத்தின் காரணமாகவும், பொய்யான சங்கதிகளை சொல்லி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. உண்மை

சங்கதிகளை வழக்குரையில் சொல்லாமல் தவறான சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. வழக்கிற்கு முன்பு நான் பிரதிவாதியை அணுகி பாகபிரிவினை செய்து கொள்ளலாம் என்று கேட்டதாக சொல்வது பொய் என்றால் ? சரியல்ல. கடந்த 1968ம் ஆண்டு சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டதால் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்குமூலம் இல்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.13 18:42:39 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்